www.agaram.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

# முதலாந் தவணைப் பரீட்சை - மார்ச் 2017

தரம் 09

அக்கரைப்பற்று வலய அதிபர்கள் சங்கம்
அக்கரைப்பற்று

புள்ளி

சுட்டெண்: ..........................

வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும்

நேரம் : 2.00 மணித்தியாலம்

## பகுதி I

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

- **1 - 20 வரையான வினாக்களுக்கு பொருத்தமான சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. சமூகப் பாதுகாப்பை உருவாக்கும் பிரதான காரணியாக அமைவது,
1) குடும்பம் 2) பாடசாலை 3) தனிமனிதன் 4) சமூகம்

02. மனிதனை சிறையிலடைத்தாலும் சிந்தனைகளைச் சிறையிலடைக்க முடியாது என்ற கருத்தின் மூலம் உலகிற்கு செய்தியை வழங்கியவர்,
1) மாக்ஸிம் கோர்க்கி 2) ஆன் பிராங்
3) லியோ டோல்ஸ்ராய் 4) பேர்னாட்ஷா

03. பௌதிகவியல் பேராசிரியரும் திறமைமிக்க வீணை வித்துவானாகவும் வாழ்ந்தவர்
1) கலிலியோ கலிலி 2) அல்பேர்ட் ஐன்ஸ்டைன்
3) ஜோன் டொயிலி 4) பர்னாட்ஷா

04. உலகப்புகழ் பெற்ற எழுத்தாளர்,
1) மாவோ சேதுங் 2) சேக்ஸ்பியர் 3) மாக்ஸிம் கோர்க்கி 4) பர்னாட்ஷா

05. இலங்கையின் தேசிய விளையாட்டு,
1) கரப்பந்து 2) வலைப்பந்து 3) கால்பந்து 4) கூடைப்பந்து

06. "வாசிப்பதற்கு பொருத்தமான நூல் அரிது அவற்றை வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணத்துவம் அடைகிறான்" என கூறியவர்,
1) பிரான்ஸிஸ் பேகன் 2) தேரோ 3) ரிச்சட் ஸ்டீவ் 4) ஜோன் டி மார்ஜோலி

07. அறிவு சார் கோட்பாட்டை அறிமுகம் செய்தவர்,
1) ஹொவாட் காட்னர் 2) அல்பேர்ட் ஐன்ஸ்டன்
3) ஜிப்ரி பாவா 4) கலிலியோ கலிலி

08. இலங்கை "கீழைத்தேசத்தின் தானியக் களஞ்சியம்" என வர்ணிக்கப்படுவதற்கு காரணமான மன்னர்கள்,
1) மகாசேனன், மகாபராக்கிரம பாகு 2) வசபன், அபயன்
3) மகாசேனன், வசபன் 4) தேவநம்பியதீசன், பண்டுகாபயன்

09. தேசிய தொழிற்தகைமை சட்டகத்தின் கீழ் பெறப்படும் சான்றிதழ்
1) RVQ 2) CVQ 3) MVQ 4) NVQ



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

10. ஒரு நிறுவனம் செயல்திறன் மிக்கதாக செயற்படுவதற்கு 5S ஐ அறிமுகப்படுத்திய நாடு
1) பிரான்ஸ் 2) பிரித்தானியா 3) ஜப்பான் 4) இந்தியா

11. Police என்ற ஆங்கிலச் சொல்லில் "O" என்ற எழுத்து குறித்து நிற்கும் சொல்லின் பொருள்,
1) நம்பிக்கை 2) விவேகம் 3) ஒழுக்கம் 4) கீழ்ப்படிவு

12. 
அருகிலுள்ள இலட்சினையை குறித்து நிற்கும் தாபனம்,
1) யுனிசெப் 2) யுனஸ்கோ
3) ஐக்கிய நாடுகள் தாபனம் 4) உலக உணவு தாபனம்

13. ரேடியத்தை கண்டுபிடித்தவர்,
1) அன்னை தெரேசா 2) மேரிகியூரி
3) கலிலியோ கலிலி 4) ஐசக் நியூட்டன்

14. பாதுகாப்பானது மனித தேவைகளுள் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கூறிய உளவியலாளர்,
1) அரிஸ்டோட்டில் 2) பிளேட்டோ
3) மாஸ்லோ 4) ஸ்டேமன்

15. வேடுவர் யுகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது,
1) நெருப்பு 2) சில்லு 3) எலும்பு 4) இரும்பு

16. மாக்ஸிம் கோர்க்கியின் உலகப் புகழ் பெற்ற படைப்புகளுள் ஒன்று,
1) டேவிட் கோப்பர் பீலட் 2) சிறகு வெட்டி விடப்பட்ட பறவை
3) நச்சத்திரங்களின் தகவலாளன் 4) பிரகாசமான பிள்ளைகள்

17. இரண்டாம் உலகமகா யுத்தத்தில் அழிவடைந் நாடு
1) இலங்கை 2) இந்தியா 3) பிரித்தானியா 4) ஜப்பான்

18. உலகப் புகழ் பெற்ற கட்டடக்கலை நிபுணர் ஜிப்ரி பாவா பெற்றுக் கொண்ட விருது
1) பத்மஸ்ரீ 2) ஒஸ்கார் 3) ஆகாகான் 4) பத்ம பூஷன்

19. மாக்ஸிம் கோர்க்கி என்ற ரஷ்ய எழுத்தாளருக்கு சவாலாக இருந்த விடயம்
1) தனிமை 2) நோய் 3) வறுமை 4) தண்டனை

20. சந்திரனில் முதன் முதலாக காலடி எடுத்து வைத்தவர்,
1) நீல் ஆம் ஸ்ரோங் 2) புறோன் டே
3) W. அமரதேவ 4) ஆன் பிராங்

(20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

- **21 - 30 வரையான வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் குறிப்பிடுக.**

21. ஈபிள் கோபுரம் அமைந்துள்ள நாடு பிரான்ஸ். (    )

22. தொழிற்பயிற்சி வழங்கும் நிறுவனங்களுள் தொழிற்பயிற்சி அதிகார சபை ஒரு அரச நிறுவனமாகும். (    )

23. தனது 15வது வயதில் லூயி பிரெயில் கட்புலனற்றோருக்கான அகராதியை உருவாக்கினார். (    )

24. இலங்கையின் பழைய பாராளுமன்றத் தொகுதியை அமைத்தவர் கட்டடக் கலை நிபுணர் ஜிப்ரி பாவா ஆவார். (    )

25. நட்சத்திரங்களின் தகவலாளன் என்ற நூலை எழுதியவர் அல்பேர்ட் ஐன்ஸ்டைன் ஆவார். (    )

26. பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கான அங்கத்துவ வயதெல்லை 18 ஆகும். (    )

27. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை றொபர்ட் ஓவன் ஆவார். (    )

28. "ஸ்ரீலங்கா இராணுவம்" இலட்சிணையில் சிங்கம் உள்ளடக்கப்பட்டுள்ளது. (    )

29. இலங்கை விமானப்படை 1972ம் ஆண்டின் பின்னர் இலங்கை வான்படை என மாற்றப்பட்டது. (    )

30. தொழில் ஒன்றை தேர்ந்தெடுப்பதற்கு இலங்கையில் தொழில் வழிகாட்டல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (    )

(10 புள்ளிகள்)

agaram.lk

- **31 - 35 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**
  **(மத்திய கிழக்கு, சமூகக் காப்பு, செயற்திறன், பௌத்தம், அன்னைத் தெரேசா)**

31. எந்தவொரு நாட்டிலும் நிரந்தர அபிவிருத்தியை ஏற்படுத்த ........................................ அவசியமாகும்.

32. துயரப்பட்ட மக்களின் துயரத்தை துடைத்தவர் ........................................ ஆவார்.

33. திரிபீடகம் ........................................ கோட்பாட்டின் நூலாகும்.

34. கிடைக்கப் பெற்ற வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தல் ........................................ எனப்படும்.

35. இஸ்லாம் சமயம் ........................................ தோற்றம் பெற்றது.

(10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. 1) பூகோள மயமாதல் என்றால் என்ன?

2) பூகோள கிராமத்திற்கான அறிவு வாயில்கள் 3 தருக.

3) பூகோள மயமாதலினால் ஏற்படும் நன்மை, தீமை இவ்விரண்டு தருக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

02. 1) சமூகக் காப்பு என்றால் என்ன?

2) சமூகக் காப்பை ஏற்படுத்தும் நிறுவனங்கள் 3 தருக.

3) சமூகக் காப்பு முறிவடைவதற்கான காரணங்கள் 4 தருக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

03. 1) திடஉறுதி என்பதனை வரைவிலக்கணம் செயக.

2) திட உறுதியுடன் செயற்படுவதற்கு அவசியமான சந்தர்ப்பங்கள் 3 தருக.

3) ஒருவர் திடஉறுதியை வளர்த்துக் கொள்ள வேண்டுமாயின் பின்பற்ற வேண்டிய குணாதிசியங்கள் 4 தருக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

04. 1) சிந்து நதி நாகரீகம் உலகிற்கு அளித்த கொடைகள் 3 தருக.

2) நல் வாழ்வுக்கான குணாம்சங்கள் 3 தருக.

3) இலங்கையின் தனித்துவம் பற்றி பேசப்படுகின்ற அம்சங்கள் 4 தருக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

05. 1) சமூகப் பாதுகாப்பிற்கு குடும்பம் ஒன்றினால் ஆற்ற வேண்டிய பணிகள் 3 தருக.

2) பாடசாலை ஒன்றினால் சமூகப் பாதுகாப்பிற்கு ஆற்றக்கூடிய பணிகள் 3 தருக.

3) சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு சமூக நிறுவனங்களினூடாக வழங்கப்படும் பங்களிப்புகள் 4 தருக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

06. 1) தொழிற் பயிற்ச்சி வழங்கக் கூடிய அரச நிறுவனங்கள் 3 தருக.

2) தொழிலொன்றை தேடிக் கொள்வதற்கு பயன்படுத்தக் கூடிய வழிமுறைகள் 3 தருக.

3) தொழில் அபிவிருத்திக்கான வழிமுறைகள் 4 தருக.

(3+3+4 = 10 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk